மக்கள் குரல் 04-8-2017 5






# கோவை அரசு தொழில்நுட்ப கல்லூரியில்
# நில மாணவர் ஆராய்ச்சித்திட்ட கருத்தரங்கு

## யல் தொழில்நுட்ப மாநில மன்ற உறுப்பினர் செயலர் துவக்கி வைத்தார்

கோவை, ஆக. 4–
அரசு தொழில்நுட்ப
2016–2017ம் ஆண்டு
ட்ட, ஆராய்ச்சி
ான, கருத்தரங்கம்,
ங்கியது.
கம் சாலையில் உள்ள,
நுட்ப கல்லூரியில்,
வியல் தொழில்நுட்ப
ின் சார்பில், மாணவர்
கருத்தரங்கு மற்றும்
இன்று துவங்கியது.
ட்களாக இந்நிகழ்ச்சி
து.
மாவுக்கு, தமிழ்நாடு
தொழில்நுட்ப மாநில
உறுப்பினர் செயலர்
லைமை தாங்கினார்.
தல்வர் (பொறுப்பு)
வேற்று பேசினார்.
ஸ்ரீ ராமகிருஷ்ணா
இயக்குநர் ஐசாக்
மோசஸ் துவக்க
. கோவை அண்ணா
த்தின் மன்
மாணவர்களை
வர் ஆராய்ச்சி திட்டப்
ளியிட்டார்.

### 13 திட்டங்களுக்கு நிதி உதவி

விழாவில், மாநில மன்றத்தின் உறுப்பினர் செயலர் சீனிவாசன் பேசியதாவது–

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் 1984ஆம் ஆண்டு, தமிழக அரசால், ஒரு தன்னாட்சி நிறுவனமாக அமைக்கப்பட்டது. இது பல்வேறு அறிவியல் துறைகளின், ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தலைமை நிறுவனமாகும்.

நமது மாநிலத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்க, பல அறிவியல் தொழில்நுட்ப திட்டங்களை மன்றம் நிறைவேற்றி வருகிறது. மன்றத்தால் நிறைவேற்றப்படும் திட்டங்களில் ஒன்று, "மாணவர் ஆராய்ச்சித் திட்டம்". 1993ம் ஆண்டு இத்திட்டம் 13 திட்டங்களுக்கு நிதி உதவி அளித்து துவக்கப்பட்டது. கடந்த 23 ஆண்டுகளாக, இத்திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### "மாணவர் ஆராய்ச்சி திட்டம்"

ஒவ்வொரு ஆண்டும், இளநிலை பொறியியல், முதுநிலை தொழில் படிப்புகள் மற்றும் அறிவியல் பிரிவுகளில், இறுதியாண்டு பயிலும் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின், ஆராய்ச்சி திறனை ஊக்குவிக்கும் பொருட்டு "மாணவர் ஆராய்ச்சி திட்டத்தினை" இம்மன்றம் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், வேளாண்மை, உயிரியல், பொறியியல், சுற்றுப்புறவியல் மருத்துவம், கால்நடையியல், இயற்பியல் மற்றும் வேதியியல் மற்றும் சமூக அறிவியல் போன்ற பிரிவுகளில், மாணவர் ஆராய்ச்சி திட்டத்திற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இதன்படி, அதிகபட்சமாக ரூ.10,000 வரை மாணவர்களின் ஒவ்வொரு ஆராய்ச்சி திட்டத்திற்கும், நிதி உதவி அளிக்கப்படுகிறது. மாணவர் ஆராய்ச்சி திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின், மாணவர் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடத்தப்படுகிறது.

### 500 திட்டங்களுக்கு நிதி உதவி

2017–18ம் ஆண்டு முதல் மாணவர் ஆராய்ச்சி திட்டத்திற்கான, தமிழக அரசின் நிதி ரூ.20 லட்சத்திலிருந்து ரூ.40 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் 500 திட்டங்களுக்கு குறையாமல், நிதியுதவி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற திட்டத்தின் மூலம், மாணவர்களின் ஆராய்ச்சித்திறனை மேம்படுத்துவதற்கும், அவர்களுக்குள் புதைந்துள்ள அறிவியல் சார்ந்த கற்பனைத் திறன்களை வெளிக் கொணர்வதற்கும், சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வண்ணம், ஆராய்ச்சியில் மேலோங்கி, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுடன், நாட்டின் உற்பத்தி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் உதவியாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

நாளை நடைபெற உள்ள நிறைவு விழாவில், கொடைக்கானல் அன்னை தெரேசா மகளிர் பல்கலைக்கழக துணைவேந்தர் வள்ளி பங்கேற்று பேசவுள்ளார். நிகழ்ச்சியில், மாநிலம் முழுவதுமிருந்து, அறிவியல், பொறியியல் மற்றும் தொழில்நுட்பம், மருத்துவம், கால்நடை மருத்துவம், விவசாயக் கல்லூரிகளிலிருந்து, 400 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# கயில் ஒயிலாட்டம் மூலம்
# கு விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஊட்டி, ஆக. 4–
லட்ட நிர்வாகத்தின்
படி, நகராட்சி,
றும் ஊராட்சி சார்பில்,
யில், டெங்கு நோய்
, பொது மக்களிடம்
ஏற்படுத்தப்பட்டு
...

பானைகள், பிளாஸ்டிக் டிரம்கள், சட்டிகள், மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, கீழ் நிலை நீர் தேக்கத் தொட்டி உள்ளிட்டவைகளை, கொசு புகாதவாறு மூடி வைக்க வேண்டும்.

அதேபோல், டயர், உடைந்த பானைகள், தேங்காய் ஓடுகள்,

